மெட்ரோ ரெயிலில் பயணம் செய்ய

# கியூ.ஆர்.கோடு டிக்கெட்டுகளுக்கு 20 சதவீதம் கட்டண சலுகை

## நீண்ட வரிசையை தவிர்க்க நடவடிக்கை

சென்னை, செப். 11– கொரோனா பாதிப்புக்கு மத்தியில் மெட்ரோ ரெயில் சேவை கடந்த 7–ந் தேதி தொடங்கியது. வண்ணாரப்பேட்டை– விமான நிலையம், சென்ட்ரல்– கோயம்பேடு– விமான நிலையம் ஆகிய 2 வழித்தடத்திலும் தற்போது ரெயில் சேவை நடைபெற்று வருகிறது.

**கியூ.ஆர். குறியீடு டிக்கெட்**

கடந்த 3 நாட்களில் 24 ஆயிரத்து 354 பயணிகள் பயணம் செய்துள்ளனர். மெட்ரோ ரெயில் நிலையங்களில் டிக்கெட் எடுக்க நீண்ட வரிசையில் நிற்பதை தவிர்க்க கியூ. ஆர். குறியீடு டிக்கெட் முறை அறிமுகம் செய்யப் பட்டுள்ளது.

ஸ்மார்ட் கார்டு டிக்கெட் முறை இருந்தாலும் வரிசையில் காத்து நிற்காமல் பயணிகள் எளிதாக செல்ல சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்தின் செல்போன் செயலியை பதிவிறக்கம் செய்து, கியூ.ஆர். குறியீடு பயணச்சீட்டு முறையை பயன்படுத்தலாம்.

மேலும் டிக்கெட் வழங்கும் கருவிகளுக்கு முன்னால் நீண்ட வரிசையில் நிற்காமல் அதிநவீன தானியங்கி டிக்கெட் சான்றளிக்கும் இயந்திரங்கள் அனைத்து மெட்ரோ ரெயில் நிலையங்களிலும் நிறுவப்பட்டுள்ளது.

**20 சதவீதம் சலுகை**

இந்த நிலையில் கியூ.ஆர். குறியீடு டிக்கெட்டை மேலும் ஊக்கப்படுத்தும் வகையில் டிக்கெட் கட்டணத்தில் 20 சதவீதம் சலுகையை மெட்ரோ ரெயில் நிறுவனம் அளித்துள்ளது. ஒருவழி பயணம் கியூ.ஆர். டிக்கெட், திரும்பும் பயணம் கியூ.ஆர். டிக்கெட், குரூப் கியூ.ஆர். டிக்கெட் மற்றும் கியூ.ஆர். ட்ரிப் பாஸ் ஆகிய பயணத்திற்கு இந்த சலுகை வழங்கப்பட்டுள்ளது.

இன்று முதல் மெட்ரோ ரெயில்களில் இந்த சலுகை கட்டணத்தில் பொதுமக்கள் பயணம் செய்யலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.